[2019] 4 எஸ்.சி.ஆர். 31

யூனியன் ஆ:ப் இந்தியா

எதிர்

அங்கூர் குப்தா

(உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 2017-2020/2019)

பிப்ரவரி 25, 2019

முன்னிலை:

[மாண்புமிகு நீதியரசர் திரு.அசோக் பூஷன்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.கே.எம்.ஜோசப்]

2015-ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம். பிரிவுகள் 57, 58 & 59 - 2017-ஆம் ஆண்டு தத்தெடுப்பு ஒழுங்குமுறைகள் (2015-ஆம் ஆண்டு சட்டம், பிரிவு 68 (இ) உ/இ. பிரிவு 2 இன் கூறு (3) கீழ் வனையப்பட்டது) - விதி.41 - 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்காக இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோர்களாக விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர் - அந்த நேரத்தில், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு மட்டுமே அமெரிக்க குடியுரிமை இருந்தது - எதிர்மேல்முறையீட்டாளர்கள் இருவரும் தத்தெடுப்புக்காக ஒரு குழந்தையின் பரிந்துரைக்காக காத்திருந்தபோது, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அமெரிக்க குடியுரிமையும் வழங்கப்பட்டது - மேற்கூறிய சங்கதியின் தொடர்ச்சியாக, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு

எதிர்மேல்முறையீட்டாளர்களை ‘இந்தியாவை சேர்ந்த வெளிநாட்டு குடிமகன்’ என்ற பிரிவின் கீழ் இரண்டாவது பதிவுக்கு பரிந்துரைத்தது - முதல் பதிவின் அடிப்படையில் தங்கள் பதிவைத் தொடர எதிர்மேல்முறையீட்டாளர்கள் கேட்டுக்கொண்டனர் - இதற்கிடையில், தத்தெடுப்புக்காக எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் ஒரு ’எஸ்’ என்ற குழந்தை பரிந்துரைக்கப்பட்டது - எதிர்மேல்முறையீட்டாளர்கள் அந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டனர் - இருப்பினும், வருங்கால இந்திய தத்தெடுப்பு பெற்றோர் என்ற பிரிவின் கீழ் முதல் விண்ணப்பத்தைத் தொடர அனுமதிக்கான அவர்களின் கோரிக்கையை ஒரு உயர்மட்டக் குழு நிராகரித்தது - இதன் விளைவாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள் மற்றொரு குழந்தையை ‘இந்தியாவை சேர்ந்த வெளிநாட்டு குடிமகன்’ என்று குறிப்பிடுவதற்காக காத்திருக்கும்படி தெரிவிக்கப்பட்டது - மேற்கூறிய முடிவுக்கு எதிராக எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு அனுமதிக்கப்பட்டது - தீர்வு: மேல்முறையீட்டில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இருவரும் அமெரிக்க குடிமக்களாக மாறியுள்ளனர் என்ற பொருண்மை, அவர்கள் இந்தியாவில் வசிக்கும் இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோராக தத்தெடுக்க தகுதியற்றவர்கள் - முதல் பதிவில் எந்தவொரு தகவலையும் பதிவேற்றுவதற்கான எந்தவொரு பொறிமுறைமையும் சட்டம் அல்லது ஒழுங்குமுறைகள் வழங்கவில்லை என்ற பொருண்மை, ஒரு இந்தியரால் வெளிநாட்டு குடியுரிமையைப் பெறுவதன் சட்ட நிலை மற்றும் விளைவுகளை

மாற்ற முடியாது - 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதன் விளைவுகள் உடனடியாக நடைமுறைக்கு வரும் - எனவே, 2015-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவுகள் 58 & 59 -இன் அடிப்படையில், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தத்தெடுப்புக்காக உள்ள குழந்தை 'எஸ்' தத்தெடுப்புக்கு சட்டப்பூர்வமாக தகுதியானது என அறிவிக்கப்பட்டது, மேலும் அறுபது நாட்களுக்குள் இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்களால் தத்தெடுக்கப்படாவிட்டால், குழந்தை 'எஸ்' ஆனது நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்பில் எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

வழக்கை தீர்த்து வைத்து, இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது.

தீர்வு: 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இந்தியாவில் வசிக்கும் வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்களாக தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர். இருப்பினும், விண்ணப்பத்தை சமர்ப்பிக்கப்பட்ட தேதியில், 2 -ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஏற்கனவே ஒரு அமெரிக்க குடிமகனாக இருந்தபோதிலும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் இந்திய குடிமகனாக இருந்ததால், அப்போதைய விதிமுறைகளின் விதிகளின்படி மற்றும் பொருத்தமான நேரத்தில் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களின்படி, இந்திய தத்தெடுப்புக்குரிய வருங்கால பெற்றோராக அந்த விண்ணப்பம் முழுமையாக ஏற்றுக்கொள்ளத்தக்கது. 2017 -ஆம் ஆண்டு தத்தெடுப்பு ஒழுங்குமுறைகள், ஒழுங்குமுறை விதி 21 (1) கூட, வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரில் ஒருவர்

வெளிநாட்டவராகவும், மற்றொருவர் இந்தியராகவும் இருந்தால், அத்தகைய சூழ்நிலையில், இந்தியாவில் வசிக்கும் இந்தியர்களுக்கு இணையாகவே கருதப்படும் என்று கூறுகிறது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 06.12.2016 அன்று அமெரிக்க குடியுரிமையைப் பெற்ற பிறகு, அவருக்கு 27.04.2017 அன்று 'இந்தியாவை சேர்ந்த வெளிநாட்டு குடிமகன்' (OCI) அட்டை வழங்கப்பட்டது. பின்னர், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இருவரும் அமெரிக்க குடிமக்களாக ஆன நிலையில், இரண்டாவது விண்ணப்பம் 05.11.2017 அன்று எதிர்மேல்முறையீட்டாளர்களால் நாடு தழுவிய தத்தெடுப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. 06.12.2016-க்குள் இருவரும் அமெரிக்க குடிமக்களாகிவிட்டார்கள் என்ற பொருண்மையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் இந்தியாவில் வசிக்கும் இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோராக தத்தெடுக்க தகுதியற்றவர்கள். முதல் பதிவில் எந்தவொரு தகவலையும் பதிவேற்றுவதற்கான எந்தவொரு பொறிமுறைமையையும் சட்டம் அல்லது ஒழுங்குமுறைகள் வழங்கவில்லை என்பதனால், ஒரு இந்தியரால் வெளிநாட்டு குடியுரிமையைப் பெறுவதன் சட்ட நிலையை மற்றும் விளைவுகளை மாற்ற முடியாது. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களின் அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதன் விளைவுகள் உடனடியாக நடைமுறைக்கு வரும். [பத்தி 12][42-ஜி, எச்; 43-ஏ-சி]

2. 2015 -ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவுகள் 58 மற்றும் 59 ஆனது, தத்தெடுப்புக்கான

இரண்டு வெவ்வேறு வழிமுறைகளை வழங்குகிறது. பிரிவு 59 (1) ன்படி, ஒரு ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையை தத்தெடுப்புக்கு சட்டப்பூர்வமாக உகந்ததாக அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் சிறப்பு தத்தெடுப்பு முகமை மற்றும் மாநில முகமை ஆகியவற்றின் கூட்டு முயற்சி இருந்தபோதிலும், ஒரு இந்திய அல்லது வெளிநாட்டில் வசிக்கும் இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோருடன் வைக்க முடியாவிட்டால், அத்தகைய குழந்தை நாடுகளுக்கு இடையே தத்தெடுப்புக்கு உகந்ததாக இருக்கும். எனவே, குழந்தை தத்தெடுப்புக்கு சட்டப்பூர்வமாக உகந்ததாக அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் காலம் கடந்து செல்ல வேண்டும். தற்போதைய வழக்கில், குழந்தை தத்தெடுப்புக்கு உகந்தது என்று 14.12.2017 அன்று பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள குழந்தைகள் நலக் குழுவால் அறிவிக்கப்பட்டது. அறுபது நாட்கள் முடிவடைவதற்கு முன்பு, பிரிவு 59 இன் கீழ் தத்தெடுப்புக்கு தகுதியுள்ள பெற்றோருக்கு குழந்தையைத் தத்தெடுப்புக்காக வழங்க முடியாது. எனினும், இந்த நீதிமன்றம் 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆகியோர் ஆரம்பத்தில் இந்தியாவில் வசிப்பவர்களாக, பின்னர் இந்தியாவின் வெளிநாட்டு குடிமக்களாகவும் தத்தெடுப்புக்கான தங்கள் விண்ணப்பங்களை நேர்மையாகத் பின்பற்றி வந்தனர் என்ற உண்மையை அறியாமல் இல்லை. பிரிவு 57 இன் படி, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இருவரும் குழந்தையை தத்தெடுக்க முழுமையாக தகுதியுடையவர்கள் மற்றும் திறமையானவர்கள்.

மேலே குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளின் கீழ், குழந்தை 'எஸ்' ஆனது 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களிடம் தத்தெடுப்புக்காக வழங்கப்பட்டது, அவர்கள் தங்கள் ஏற்றுக்கொள்ளலை உடனடியாக தொரிவித்துகொண்டு, குழந்தையுடன் தொடர்பு கொண்டனர், மேலும் குழந்தையை தத்தெடுப்பதற்காக விருப்பம் உள்ளதாகவும், மேலும் அதற்கு வேண்டிய அனைத்து பராமரிப்பையும் மேற்கொள்வதற்கும், நல்ல கல்வியை அளிப்பதற்கு தயாராகவும் உள்ளனர். குழந்தையை தத்தெடுப்பதற்கான முயற்சியில் 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களின் நேர்மை அல்லது தகுதியில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் இன்றுவரை நடைமுறையில் உள்ள சட்டரீதியான நடைமுறை மற்றும் சட்டரீதியான ஆட்சிமுறைமை அனைத்து ஆர்வலர்களுக்கும் சமமாக பொருந்தும், அதாவது, இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்கள் மற்றும் நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்புக்கான வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் சமமாக இருக்கும் நிலையில் அதனை புறக்கணிக்க முடியாது. எவ்வாறாயினும், பிரிவு 59(2) இன் அடிப்படையில், 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்பில், அவர்கள் இந்தியாவின் வெளிநாட்டு குடிமக்களாக இருப்பதற்கும், மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் பொருண்மைகளின் விளைவுகளின் காரணமாகவும் முன்னுரிமை அளிக்கப்படலாம். எனவே, தத்தெடுப்புக்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று குழந்தை 'எஸ்' க்கு தகுதிவாய்ந்த அதிகார

அமைப்பு மீண்டும் அறிவிக்க வேண்டும், இது குறித்தான அறிவிக்கை வெளியிடப்பட வேண்டும். குழந்தை 'எஸ்' தத்தெடுப்புக்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள், இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்களால் எடுக்கப்படவில்லை அல்லது தத்தெடுக்கப்படவில்லை என்றால், குழந்தை 'எஸ்' நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்பில் 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தத்தெடுப்பிற்காக வழங்கப்படும். அதன்பிறகு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் முடிக்கப்படும். [பத்திகள் 15 மற்றும் 16][44-ஜி-எச்; 45-ஏ-இ, ஜி, எச்; 46-ஏ]

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண்கள். 2017-2020 / 2019.

கர்நாடக உயர்நீதிமன்றத்தின் 04.09.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து (நீதியர் ஈராய்வு அமர்வு) நீதிப்பேராணை மேல்முறையீடு எண். 2259/2018 (பொது பல்வகை – பின்னடையுரிமை வழக்கு) & நீதிப்பேராணை மேல்முறையீடு எண். 2675/2018 (பொது பல்வகை - பின்னடையுரிமை வழக்கு) உ.நீ.வழக்கு எண்கள். 1690-1691/2018.

மேல்முறையீட்டாளர்களுக்காக திரு.அமன் லெகி, ஏ. எஸ். ஜி., திருமதி பிரியங்கா தாஸ், திருமதி ஷ்ரத்தா தேஷ்முக், திரு.குர்மீத் சிங் மக்கர் ஆகியோர் ஆஜராகினர்.

எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக திருமதி.ஜெய்னா கோத்தாரி, மூத்த வழக்கறிஞர்., திருமதி.அனிந்திதா பூஜாரி, திருமதி. நித்யா ராஜசேகர், திருமதி ஆர்த்தி கிருப குமார் ஆகியோர் ஆஜராகினர்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன் அவர்களால் பகரப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் முன் எச்சரிக்கை மனுவின் மூலம் ஆஜராகினர், நாங்கள் தரப்பினர்களின் வழக்கறிஞர்களிடம் கேட்டறிந்து, இறுதியாக விடயத்தை முடிவு செய்யத் தொடங்கினோம்.

3. நீதிப்பேராணை மேல்முறையீடு எண். 2259/2018 மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீடு எண்.2675/2018 - இல் 04.09.2018 தேதியிட்ட நீதியர் ஈராயத்தின் அமர்வு தீர்ப்பை எதிர்த்து இந்திய ஒன்றியம் மற்றும் மத்திய தத்தெடுப்பு மற்றும் வளங்கள் முகமை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மேல்முறையீடு செய்துள்ளது. மற்ற இரண்டு மேல்முறையீடுகளுக்கான காரணம்: உ.நீ.வழக்கு எண். 1690/2018 மற்றும் உ.நீ.வழக்கு எண். 1691/2018 இல் உயர் நீதிமன்றம் பிறப்பித்த 04.09.2018 தேதியிட்ட பொதுவான ஆணையைக் கேள்விக்குட்படுத்தி மற்ற இரண்டு மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

4. நீதிப்பேராணை மேல்முறையீடு எண்.2259/2018 மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீடு எண்.2675/2018 -இல் நீதியர் ஈராயத்தின் அமர்வால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் மேல்முறையீட்டை நாங்கள் முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொள்கிறோம். நீதியர் ஈராயத்தின் அமர்வால் குறிப்பிட்டுள்ளபடி, மேல்முறையீட்டுக்கு வழிவகுக்கும் சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு:-

4.1 2000 ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் மற்றும் இந்திய மேலாண்மை முகமை ஆகியவற்றில் தனது படிப்பை முடித்த பிறகு, 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் திரு.அங்கூர் குப்தா, அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தார். 2004 ஆம் ஆண்டில், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் திருமதி. கீதிகா அகர்வால் தனது ஆய்வு படிப்பிற்காக அமெரிக்கா சென்றார். ஜூன், 2006 இல் அவர்கள் அமெரிக்காவில் தங்கியிருந்தபோது, 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் திருமணம் செய்துகொண்டனர். அவர்கள் அமெரிக்காவில் பத்து வருட காலம் தங்கியிருந்தனர். அவர்கள் 2016 ஆம் ஆண்டு இந்தியாவுக்குத் திரும்பினர். அமெரிக்காவில் தங்கியிருந்தபோது, 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அமெரிக்கக் குடிமகன் ஆனார்; 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அமெரிக்க குடியுரிமைக்கு

விண்ணப்பித்தார். இருப்பினும், 2016 ஆம் ஆண்டு வரை, தம்பதியினர் இந்தியாவுக்குத் திரும்பியதும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படவில்லை. மேலும், திருமணமாகி பத்து ஆண்டுகள் ஆகியும், தம்பதியருக்கு குழந்தை பாக்கியம் இல்லை. எனவே, அவர்கள் இந்தியா திரும்பியதும் ஒரு இந்திய குழந்தையை தத்தெடுக்க திட்டமிட்டனர்.

4.2 1-ஆம் மற்றும் 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் 19.07.2016 அன்று மத்திய தத்தெடுப்பு ஆதார தகவல் மற்றும் வழிகாட்டுதல் அமைப்பு (CARINGS) மூலம் ஒரு குழந்தையை இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோராக தத்தெடுக்க ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர். தத்தெடுப்புக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு சற்று முன், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 19.05.2016 அன்று அமெரிக்காவின் குடியுரிமையைப் பெற்றார், அது 19.07.2016 அன்று அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் விளம்பப்பட்டது.

4.3 2015-ஆம் ஆண்டு வழிகாட்டுதல் படி, ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதற்கான 'வருங்கால வளர்ப்பு பெற்றோரின்' முயற்சிகளை ஒருங்கிணைக்க, ஒரு சிறப்பு தத்தெடுப்பு முகமையால் ஒரு உட்கள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டது. 01.08.2016 அன்று, பதிவுசெய்யப்பட்ட சிறப்பு தத்தெடுப்பு நிறுவனமான ஷிஷு மந்திர் முகமை, அதன் உட்கள ஆய்வு அறிக்கையை தாக்கல் செய்தது.

அதன்பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்கான பரிந்துரைக்காக வரிசையில் காத்திருந்தனர். 05.12.2016 அன்று, குழந்தையை தத்தெடுப்பதற்காகப் பரிந்துரைப்பதற்காக அவர்கள் காத்திருந்த நேரத்தில், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு 05.12.2016 அன்று அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது.

4.4 எதிர்மேல்முறையீட்டாளர்களின் கூற்றுப்படி, அவர்கள் பெற்ற ஆலோசனையின் அடிப்படையில், அவர்கள் மத்திய தத்தெடுப்பு வள முகமை, 2-ஆம் மேல்முறையீட்டாளர் ஆகியோரிடம் 1-ஆம் மேல்முறையீட்டாளரின் குடியுரிமை நிலை மாற்றம் குறித்த தகவலை தெரிவித்தனர். மேலும், 05.11.2017 அன்று, தம்பதியினர் தங்களை இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டு குடிமக்கள் (OCI) என்று பதிவு செய்து கொண்டனர். 2015-ஆம் ஆண்டு குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கான வழிகாட்டுதல்களின் மேலோ கூறியபடி, 4 ஜனவரி 2017 அன்று அறிவிக்கப்பட்ட 2017-ஆம் ஆண்டு தத்தெடுப்பு ஒழுங்குமுறைகள், (சுருக்கமாக 2017 ம் ஆண்டு ஒழுங்குமுறைகள்) கீழ் இந்தப் பதிவு செய்யப்பட்டது.

4.5 எதிர்மேல்முறையீட்டாளர்கள் தங்கள் குடியுரிமை நிலை மாற்றம் குறித்து சிறப்பு தத்தெடுப்பு முகமைக்கு தெரிவித்ததால், சிறப்பு முகமை, 05.12.2017 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம்,

எதிர்மேல்முறையீட்டாளர்களின் குடியுரிமை நிலை மாற்றம் குறித்து 2-ஆம் மேல்முறையீட்டாளருக்கு தகவல் தெரிவித்தது. சிறப்பு தத்தெடுப்பு முகமை, எதிர்மேல்முறையீட்டாளர்களின் இரண்டாவது பதிவு எண்ணாக, அதாவது CUSA201771205 ஐக் குறிப்பிட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில், சிறப்பு தத்தெடுப்பு முகமையானது மேல்முறையீட்டாளர்களிடம், முதல் பதிவின் அடிப்படையில் ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்காக எதிர்மேல்முறையீட்டாளர்கள் மூப்புதன்மையின் படி தொடர வேண்டும் என்று கோரியது.

4.6. 06.12.2017 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம், 2-ஆம் மேல்முறையீட்டாளர் தம்பதியரின் மூப்புத்தன்மையைத் தொடர்வதற்கான கோரிக்கை தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு ஒப்புதலுடன் பரிசீலிக்கப்படும் என்று சிறப்பு தத்தெடுப்பு முகமைக்குத் தெரிவித்தார். இருப்பினும், தத்தெடுப்புக்கான தம்பதியரின் தகுதியானது" இந்தியாவை சேர்ந்த வெளிநாட்டு குடிமகன்' என்ற பிரிவின் கீழ் இருக்கும்.

4.7 01.01.2018 அன்று, குழந்தை ஷோமியா (பிறந்த தேதி 30.09.2017) 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தத்தெடுப்பதற்காக 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களால் பரிந்துரைக்கப்பட்டது. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அந்த பரிந்துரையை

ஏற்றுக்கொண்டார்கள். பாட்னாவில் 3-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருடன் இருந்த பேபி ஷோமியாவை 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பார்க்கச் சென்றனர். எனவே, 04.01.2018 அன்று, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் 2-ஆம் மேல்முறையீட்டாளரின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு, பேபி ஷோமியாவை தத்தெடுப்பதற்கான குறிப்பைத் தொடருமாறு கோரிக்கை வைத்தனர். குழந்தை ஷோமியாவை தத்தெடுப்பதற்கான பரிந்துரை 18.01.2018 அன்று காலாவதியாகிவிடும் என்று சந்தேகித்த 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள், பேபி ஷோமியாவை தத்தெடுப்பதைத் தொடர்ந்து மேல்முறையீட்டாளர்களுடன் பலமுறை கடிதம் கொடுத்தனர். மீண்டும், மார்ச் 2018 இல், 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் பேபி ஷோமியாவைப் பார்வையிட்டனர். இந்தப் பயணத்தின் போது, 27.02.2018 அன்று நடந்த உயர்மட்டக் குழுக் கூட்டத்தில், இந்தியாவில் வாழும் இந்தியர்களை தத்தெடுக்கும் பெற்றோர் என்ற முறையில் 19.07.2016 தேதியிட்ட முதல் விண்ணப்பத்தைத் தொடர அனுமதி கோரிய அவர்களின் கோரிக்கை செல்லாது என அறிவிக்கப்பட்டது. ஏனெனில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டது. அதற்குப் பதிலாக, மற்றொரு குழந்தை 'இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமகன்' என்று பரிந்துரைக்கப்படும் வரை

காத்திருக்க வேண்டும் என்று அவர்களுக்கு மேலும் தெரிவிக்கப்பட்டது.

4.8 எனவே, 15.03.2018 தேதியிட்ட மின்னஞ்சலில் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட மேற்கூறிய முடிவை எதிர்த்து, நீதிப்பேராணை மனு எண். 12427-12428/2018 என்ற மனுவை 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்தனர். நீதிப்பேராணை நீதிமன்றம் 19.06.2018 தேதியிட்ட ஆணை மூலம் நீதிப்பேராணை மனுக்களை அனுமதித்தது. நீதிப்பேராணை நீதிமன்றம் 15.03.2018 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்ட மேற்கூறிய முடிவை ரத்து செய்தது. மேலும், உயர் நீதிமன்றம், 19.07.2016 தேதியிட்ட முதல் விண்ணப்பத்தின் அடிப்படையில், 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் கோரிக்கையை விரைவாக பரிசீலித்து, ஆனால் இந்த ஆணை கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பரிசீலித்து ஆய்வு செய்யுமாறு உத்தரவிட்டது.

4.9 கற்றறிந்த தனி நீதிபதி தனது தீர்ப்பு மற்றும் 19.06.2018 தேதியிட்ட ஆணையின் மூலம், பின்வரும் உத்தரவைப் பிறப்பித்து நீதிப்பேராணை மனுக்களை அனுமதித்தார்:-

"**ஆணை**

(1) நீதிப்பேராணை மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன.

(2) 15.03.2018- தேதியிட்ட தகவல் தொடர்பு - இணைப்பு-Z இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

(3) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட 19.07.2016 தேதியிட்ட விண்ணப்பத்தின் வலிமை மற்றும் அதன் தன்மையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை செயலுறுத்தும் நீதிப்பேராணை மூலம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அதனை கருத்தில் கொண்டும் ஆராய்வதற்கும், மேற்கூறிய அவதனிப்புகளை கவனத்தில் கொண்டு இணைப்பு-அ/இணைப்பு-ஆர்-2 ஆனது. இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் விரைவாக பரிசீலனை செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

4.10 இந்திய ஒன்றியம் மற்றும் மத்திய தத்தெடுப்பு வள முகமை, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவை இந்த தீர்ப்பை எதிர்த்து நீதிப்பேராணை மேல்முறையீடு எண். 2259 /2018 மற்றும் நீதிப்பேராணை மேல்முறையீடு எண். 2675/2018 ஐ தாக்கல் செய்தது. உ.நீ.வழக்கு எண். 1690-1691/2018 ஆகிய இரண்டு அவமதிப்பு விண்ணப்பங்கள் 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டன, அவை உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் அமர்வு நீதிபதிகளால் 04.09.2018 தேதியிட்ட தீர்ப்பின்படி பரிசீலிக்கப்பட்டு முடிவு

செய்யப்பட்டன. உயர் நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தின் அமர்வு நீதிபதிகளால் 04.09.2018 தேதியிட்ட தீர்ப்பின்படி நீதிப்பேராணை மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்தது. தனி நீதிபதியின் உத்தரவை நீதியர் ஈராயத்தின் அமர்வு உறுதிசெய்தது. நீதிப்பேராணை மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், அவமதிப்பு மனுக்களும் முடிக்கப்பட்டன. தீர்ப்பின் பத்தி எண். 30 மற்றும் 31ஐ பிரித்தெடுப்பது பயனுள்ளது, இது தற்போதைய வழக்குக்கு பொருத்தமானது:-

"30. மேற்கூறிய காரணங்களுக்காக, குழந்தை ஷோமியாவை, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தத்தெடுப்பதற்காக, மேல்முறையீட்டாளர்கள் மறுப்பது நியாயமில்லை என்று நீதிப்பேராணை நீதிமன்றம் சரியாக முடிவு செய்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் உருவாகும் தனித்துவமான பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில், இந்திய அரசியலமைப்பின் சட்டம்-226 இன் கீழ் நீதிப்பேராணை நீதிமன்றத்தின் அசாதாரண அதிகார வரம்பில் தலையிடுவதற்கு எந்த காரணமும் இல்லை. எனவே, நீதிப்பேராணை மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டு, நிலுவையில் உள்ள விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இந்த உத்தரவின்

சான்றளிக்கப்பட்ட நகல் கிடைத்த நாளிலிருந்து நான்கு வாரங்களுக்குள் நீதிப்பேராணை நீதிமன்றத்தின் ஆணைகளை நடைமுறைப்படுத்துமாறு மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

31. நீதிப்பேராணை மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு, மேலும் மேல்முறையீட்டாளர்களுக்கு நீதிப்பேராணை நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை மேலே குறிப்பிட்டுள்ளபடி, அடுத்த காலகட்டத்திற்குள் செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டதன் காரணமாக, அவமதிப்பு நடவடிக்கை முடிக்கப்பட்டது.

4.11 மேற்படி தீர்ப்பால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

5. 2015-ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவுகள் 57, 58 மற்றும் 59 மற்றும் 2017-ஆம் ஆண்டு தத்தெடுப்பு விதிமுறைகள் ஆகிய விதிகளை சரியாகக் கட்டமைக்காமல் உயர்நீதிமன்றம், கற்றறிந்த தனி நீதிபதி மற்றும் நீதியர் ஈராயத்தின் அமர்வு ஆகிய இரண்டும் தவறு செய்ததாக மேல்முறையீட்டாளர்களுக்காக ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் ஏஎஸ்ஜி ஸ்ரீ அமன் லேகி சமர்ப்பித்தார். 06.12.2016 அன்று அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்று நாட்டிற்குள் தத்தெடுப்பதற்கான முதல்

விண்ணப்பத்தை 19.07.2016 அன்று சமர்ப்பித்த பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர்கள் நாட்டின் தத்தெடுப்பு மண்டலத்திற்கு வெளியே சென்றார்கள் என்று சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டாவது விண்ணப்பமானது எதிர்மேல்முறையீட்டாளர்களால் 05.11.2017 அன்று நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது, ஆனால் அந்த இரண்டாவது விண்ணப்பத்தில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தங்களின் வெவ்வேறு அடையாளத்தையும் அலைபேசி எண்களையும் கொடுத்துள்ளதாக சமர்பிக்கப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் நாட்டிற்குள் தத்தெடுப்பதற்கான பரிசீலனை மண்டலத்திற்கு வெளியே சென்றுவிட்டதால், அவர்களின் விண்ணப்பத்தை நாட்டிற்குள் தத்தெடுப்பதற்கான மூப்பு அடிப்படையில் பரிசீலிக்க முடியாது என்று சமர்பிக்கப்பட்டது. மூப்பின் அடிப்படையில் உள்நாட்டில் தத்தெடுப்புக்காக 22,000 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் காத்திருப்பதாகவும், எனவே அவர்களை சுலபமாக முந்திக்கொண்டு செல்ல முடியாது என மேலும் சமர்பிக்கப்பட்டது. 01.01.2018 அன்று அனுப்பப்பட்ட ஷோமியாவை தத்தெடுப்பதற்கான வாய்ப்பு, எதிர்மேல்முறையீட்டாளர்களின் முதல் விண்ணப்பத்தின் அடிப்படையில் அனுப்பப்பட்டது என்றும், 04.01.2018 அன்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் 05.11.2017 தேதியிட்ட இரண்டாவது பதிவு குறித்து எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்த பிறகு, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டு, அதில் அவர்களின் மூப்பு குறித்த முடிவு உரிய தகுதிவாய்ந்த

அதிகார அமைப்பால் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. 15.03.2018 அன்று எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அவர்களின் முதல் விண்ணப்பத்தின் அடிப்படையில் மூப்புநிலையின் பலனை வழங்க முடியாது என்றும், அவர்கள் இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமகன் என்ற சலுகையைப் பெற காத்திருக்க வேண்டும் என்றும் தகவல் அனுப்பப்பட்டது. உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளபடி, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக எந்த விதிவிலக்கும் அளிக்கக்கூடிய சிறப்பு சூழ்நிலைகள் எதுவும் இல்லை என்று சமர்ப்பிக்கப்பட்டது.

6. தத்தெடுப்புக்காக ஏற்கனவே பதிவு செய்துள்ள இந்தியப் பெற்றோர்கள் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெறும்போது, 2015-ஆம் ஆண்டு சட்டம், மற்றும் 2017-ஆம் ஆண்டு ஒழுங்குமுறைகள் ஆகியவை எந்த வழிமுறையையும் வழங்கவில்லை என்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சமர்ப்பித்தார். 2017-ஆம் ஆண்டு விதிமுறைகளின் 41வது விதியின்படி, ஒரு பொதுவான மூப்புப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது, அதாவது முதல் விண்ணப்பத்தின் அடிப்படையில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தங்கள் மூப்பு நிலையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே, ஷோமியாவை எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு தத்தெடுக்கும் வாய்ப்பை குறை என்று சொல்ல முடியாது. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தத்தெடுப்பதற்கான விண்ணப்பம் செய்ய முழுத் தகுதியுடையவர்கள் என்றும்,

மேலும் அவர்கள் தகுதியும், பொருளாதார ரீதியாக நிலையாக, குழந்தையைத் தத்தெடுக்க ஆர்வமாக உள்ளனர். 06.12.2016 அன்று எதிர்மேல்முறையீட்டாளருக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டதால், இந்தியப் பெற்றோராக அவர்களின் முதல் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு, அவர்களின் உரிமையை மறுக்க முடியாது என்று மேலும் சமர்ப்பிக்கப்பட்டது.

7. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆகிய இருவருக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டிருந்தாலும், இருவரும் இந்தியாவின் பெங்களூரில் வசிப்பவர்கள் என்றும், இரண்டு விண்ணப்பங்களிலும் அவர்களது வசிப்பிடமானது இந்தியாவாகக் காட்டப்பட்டுள்ளது, எனவே இந்த வித்தியாசமான சூழ்நிலைகளில், அவர்களுக்கு ஷோமியாவை தத்தெடுப்பதற்காக சரியான முறையில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் நேர்மையான வகையில் எந்த தகவலையும் மறைக்கவில்லை மற்றும் 05.11.2017 அன்று வெளிநாட்டு இந்திய குடிமகன் என்ற முறையில் நேர்மையான வகையில் தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்ததாகவும், 02.01.2018 அன்று ஷோமியாவை தத்தெடுப்பதற்கான வாய்ப்பைப் பெற்ற உடனேயே, 04.01.2018 அன்று, இரண்டு விண்ணப்பங்களின் விவரங்களையும் அளித்து ஒரு மின்னஞ்சல் அனுப்பினார்கள் என்று சமர்ப்பிக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கும் மேலான மகிழ்ச்சியான திருமண வாழ்க்கைக்குப் பிறகும், அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால், எதிர்மேல்முறையீட்டாளர்கள் உண்மையான முறையில் தத்தெடுப்பதற்கான

தங்கள் கோரிக்கையை உறுதியுடன் தொடர்கின்றனர். தற்போதைய வழக்கை ஒரு விதிவிலக்கான வழக்காகக் கருதலாம் என்றும், அதை முன்னுதாரணமாக மாற்றாமல், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக தத்தெடுப்பு நடத்த அனுமதிக்கப்படும் என்றும் உயர் நீதிமன்றம் சரியாகக் கூறியுள்ளது.

8. தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்கறிஞர்களின் சமர்ப்பிப்புகளை நாங்கள் பரிசீலித்து, கோப்புகளை ஆராய்ந்தோம்.

9. 2015-ஆம் ஆண்டு சட்டம், அத்தியாயம் VIII தத்தெடுப்பு பற்றியது. பிரிவு 56 துணைப்பிரிவு (1) இன் சட்டத்தின் விதிகளின்படி, ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளுக்கு, சட்டத்தின் விதிகள், அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் மற்றும் அதிகார அமைப்பால் வகுக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளின்படி, குடும்பத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்காக தத்தெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என கூறுகிறது. பிரிவு 57 ஆனது, தத்தெடுக்கும் வருங்கால பெற்றோருக்கான தகுதிகள் குறித்து கூறுகிறது. அது பின்வருமாறு:-

> **57. தத்தெடுக்கும் வருங்கால பெற்றோரின் தகுதிகள்.--** (1) தத்தெடுக்கும் பெற்றோர்கள் உடல் தகுதியுடனும், பொருளாதார நிலையுடனும், மனரீதியாக விழிப்புணர்வுடனும், ஒரு குழந்தையை தத்தெடுத்து நன்றாக வளர்ப்பதற்கு அதிக உந்துதலுடன் இருக்க வேண்டும்.
>
> (2) ஒரு தம்பதியாக இருந்தால், தத்தெடுப்புக்கு இருவருடைய ஒப்புதல்களும் தேவையாகும்.

(3) நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு மற்றும் அதிகாரத்தால் வடிவமைக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளின் விதிகளின்படி, ஒரு ஒற்றை அல்லது விவாகரத்து பெற்ற நபரும் தத்தெடுக்க முடியும்.

(4) ஒரு ஆண், பெண் குழந்தையை தத்தெடுக்க தகுதியற்றவர் ஆவார்.

(5) அதிகார அமைப்பால் தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளில் குறிப்பிடப்படும் வேறு ஏதேனும் நிபந்தனைகள் சேர்க்கப்படும்.

10. பிரிவு 58, இந்தியாவில் வசிக்கும் இந்திய வருங்கால வளர்ப்புப் பெற்றோர்களால் தத்தெடுப்பதற்கான நடைமுறையைக் கையாள்கிறது, இது பின்வரும் விளைவு:-

58. இந்தியாவில் வசிக்கும் இந்திய வருங்கால வளர்ப்பு பெற்றோர்கள் தத்தெடுப்பதற்கான நடைமுறை.--(1) இந்தியாவில் வாழும் இந்திய வருங்கால வளர்ப்பு பெற்றோர்கள், எந்த மதத்தைப் சாந்திருக்காமல், ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையைத் தத்தெடுக்க விரும்பினால், அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ளப்படி ஒரு சிறப்பு தத்தெடுப்பு முகமையில் விண்ணப்பம் செய்யலாம்.

(2) பிரத்யேக தத்தெடுப்பு முகமை, வருங்கால வளர்ப்பு பெற்றோரின் உட்கள ஆய்வறிக்கையைத் தயாரித்து, அவர்கள் தகுதியுடையவர்களாகக் கண்டறியப்பட்டவுடன், தத்தெடுப்பதற்கு

சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்கப்பட்ட ஒரு குழந்தையை அவர்களுக்கு பரிந்துரைக்கும். அத்துடன், அவர்களுக்கு குழந்தையின் ஆய்வு அறிக்கை மற்றும் குழந்தையின் மருத்துவ அறிக்கை ஆகியவற்றை அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள விதத்தில் அளிக்கும்.

(3) வருங்கால வளர்ப்பு பெற்றோரிடமிருந்து குழந்தை ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பேரில், குழந்தையின் ஆய்வு அறிக்கை மற்றும் அத்தகைய பெற்றோரால் கையெழுத்திடப்பட்ட குழந்தையின் மருத்துவ அறிக்கையுடன், சிறப்பு தத்தெடுப்பு முகமை குழந்தையை தத்தெடுப்புக்கு முந்தைய வளர்ப்பு பராமரிப்பில் ஒப்படைத்து, அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள விதத்தில், தத்தெடுப்பு ஆணையைப் பெறுவதற்காக நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்ய வேண்டும்.

(4) நீதிமன்ற உத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற்றவுடன், சிறப்பு தத்தெடுப்பு முகமை உடனடியாக அதை வருங்கால தத்தெடுப்பு பெற்றோருக்கு அனுப்ப வேண்டும்.

(5) தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள குழந்தையின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வு ஆகியவை அதிகாரத்தால்

வடிவமைக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள விதத்தில் பின்பற்றப்பட்டு உறுதிப்படுத்தப்படும்.

11. கவனிக்கப்பட வேண்டிய அடுத்த விதிமுறை, பிரிவு 59 ஆகும். இது ஒரு ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையை நாடுகளுக்கிடையே தத்தெடுப்பதற்கான நடைமுறையை வழங்குகிறது, இது பின்வருமாறு:-

> **59. ஒரு ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையை நாட்டிற்குள் தத்தெடுப்பதற்கான நடைமுறை.--** (1) ஒரு ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது சரணடைந்த குழந்தையை ஒரு இந்திய அல்லது குடியுரிமை இல்லாத இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோருடன் சேர்க்க முடியவில்லை என்றால், குழந்தை தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் சிறப்பு தத்தெடுப்பு முகமை மற்றும் மாநில முகமை ஆகிய இரண்டின் கூட்டு முயற்சியால் தத்தெடுப்பு கொடுக்க முடியாவிட்டால், அத்தகைய குழந்தையை நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்புக்கு உகந்தது என குறிப்பிடப்படுகிறது:
>
> வரம்புரையாக உடல் மற்றும் மனரீதியலான குறைபாடு உள்ள குழந்தைகள், உடன்பிறந்தவர்கள் மற்றும் ஐந்து வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு, தத்தெடுப்பு விதிமுறைகளுக்கு

இணங்க, அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளின்படி, அத்தகைய நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்புக்கு மற்ற குழந்தைகளை விட முன்னுரிமை அளிக்கப்படலாம்.

(2) இந்தியக் குழந்தைகளை நாடுகளுக்கிடையே தத்தெடுப்பதில் தகுதியுள்ள ஒரு குடியுரிமை இல்லாத இந்தியர் அல்லது இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமகன் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(3) இந்தியாவிலிருந்து ஒரு ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையைத் தத்தெடுக்க விரும்பினால், அவர்களின் மதத்தைப் பொருட்படுத்தாமல், வெளிநாட்டில் வசிக்கும் தத்தெடுக்கும் பெற்றோராக இருக்கும் குடியுரிமை இல்லாத இந்தியர் அல்லது இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமகன் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அல்லது வெளிநாட்டவர், அதிகாரம் பெற்ற வெளிநாட்டு தத்தெடுப்பு முகமை, அல்லது மத்திய ஆணையம் அல்லது சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்கு அவர்கள் வழக்கமாக வசிக்கும் நாட்டில், அதிகார அமைப்பால் வடிவமைக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பிக்கலாம்.

(4) அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு தத்தெடுப்பு முகமை, அல்லது மத்திய ஆணையம் அல்லது சம்பந்தப்பட்ட அரசுத் துறை, அத்தகைய வருங்கால தத்தெடுப்பு பெற்றோரின் உட்கள ஆய்வு அறிக்கையைத் தயாரித்து, அவர்கள் தத்தெடுக்க தகுதியுடையவர்களாகக் கண்டறியப்பட்டவுடன், இந்தியாவைச் சேர்ந்த ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்கான விண்ணப்பத்தை, அந்த அதிகார அமைப்பால் வகுக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளின்படி அந்த அதிகார அமைப்புக்கு பரிந்துரை செய்யும்.

(5) அத்தகைய வருங்கால தத்தெடுப்பு பெற்றோரின் விண்ணப்பத்தின் மீது ஆணையம் பரிசீலினை செய்து, விண்ணப்பதாரர்கள் பொருத்தமானவர்கள் என்று கண்டறியப்பட்டால், அந்த விண்ணப்பத்தை தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக தகுதியுள்ள குழந்தைகள் இருக்கும் சிறப்பு தத்தெடுப்பு முகமைகளில் ஒன்றிற்கு பரிசீலனைக்கு அனுப்பும்.

(6) சிறப்பு தத்தெடுப்பு முகமை, அத்தகைய வருங்கால தத்தெடுப்பு பெற்றோருக்கு ஒரு குழந்தையை இணைத்து, அந்த குழந்தையின் ஆய்வு அறிக்கை மற்றும் குழந்தையின் மருத்துவ அறிக்கையை அத்தகைய பெற்றோருக்கு அனுப்பும், அவர்கள் அந்த குழந்தையை ஏற்றுக்கொண்டு, குழந்தையின் ஆய்வு அறிக்கை மற்றும் மருத்துவ

அறிக்கையை முறையாக கையொப்பமிட்டு, மேற்கூறிய முகமைக்கு அதனை திரும்பி அனுப்ப வேண்டும்.

(7) வருங்கால தத்தெடுப்பு பெற்றோர் குழந்தையை ஏற்றுக்கொண்டதற்கான ஒப்புதல்களை பெற்றவுடன், அதிகார அமைப்பால் வகுக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளின்படி, சிறப்பு தத்தெடுப்பு முகமையானது நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்து, தத்தெடுப்பிற்கான உத்தரவை பெற வேண்டும்.

(8) நீதிமன்ற உத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகலைப் பெற்றவுடன், சிறப்பு தத்தெடுப்பு முகமை உடனடியாக அதை அதிகார அமைப்பு, மாநில முகமை மற்றும் வருங்கால தத்தெடுப்பு பெற்றோருக்கு அனுப்பி, குழந்தைக்கு கடவுச்சீட்டு பெற வேண்டும்.

(9) தத்தெடுப்பு பற்றி, இந்திய குடியேற்ற அதிகாரிகளுக்கும், குழந்தையைப் பெறும் நாட்டின் குடியேற்ற அதிகாரிகளுக்கும் அதிகார அமைப்பு தகவல் தெரிவிக்க வேண்டும்.

(10) வருங்கால தத்தெடுப்பு பெற்றோர், குழந்தைக்கு கடவுச்சீட்டு மற்றும் நுழைவு இசைவு (விசா) வழங்கப்பட்டவுடன், சிறப்பு தத்தெடுப்பு நிறுவனத்திடமிருந்து குழந்தையை நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

(11) அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு தத்தெடுப்பு முகமை, அல்லது மத்திய ஆணையம் அல்லது சம்பந்தப்பட்ட அரசுத் துறை,

தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் உள்ள குழந்தையைப் பற்றிய முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பதை உறுதிசெய்து, ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், ஆணையம் மற்றும் சம்பந்தப்பட்ட இந்திய தூதரக அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள முறையில், மாற்று ஏற்பாட்டைச் செய்வதற்கு பொறுப்பாகும்.

(12) ஒரு வெளிநாட்டவர் அல்லது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அல்லது இந்தியாவில் வசிக்கும் வெளிநாட்டுக் குடிமகன், இந்தியாவில் வழக்கமாக வசிப்பவர் ஆகியோர் இந்தியாவில் இருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுக்க விரும்பினால், இந்தியாவில் உள்ள அவரது நாட்டின் தூதரகத்தின் ஆட்சேபனை இல்லா சான்றிதழுடன் அதிகார அமைப்பால் உருவாக்கப்பட்ட தத்தெடுப்பு விதிமுறைகளில் வழங்கப்பட்டுள்ள முறைகளின்படி, மேலும் தேவையான நடவடிக்கைகளுக்காக, அதிகார அமைப்பிடம் விண்ணப்பிக்கலாம்.

12. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் இந்தியாவில் வசிக்கும் வருங்கால தத்தெடுக்கும் பெற்றோராக தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்தனர். விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் தேதியில், 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஏற்கனவே ஒரு அமெரிக்க குடிமகனாக இருந்தாலும், 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் இந்திய குடிமகனாக இருந்தபோதிலும், அந்த

விண்ணப்பம், விதிமுறைகளின் விதிகளின்படி மற்றும் தொடர்புடைய நேரத்தில் பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்களின்படி, இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோர்கள் என்ற வகையில் முழுமையாக பராமரிக்கத்தக்கது. 2017 ஆம் ஆண்டு விதிமுறைகளின் விதி 21(1) இன் ஆனது, வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரில் ஒருவர் வெளிநாட்டவராகவும் மற்றவர் இந்தியராகவும் இருந்தால், அத்தகைய நிலையில், இந்தியாவில் வாழும் இந்தியர்களுக்கு இணையாக கருதப்படும் என கூறுகிறது. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் 06.12.2016 அன்று அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்ற பிறகு, 27.04.2017 அன்று இந்தியாவைச் சேர்ந்த வெளிநாட்டுக் குடிமகன் என்ற அட்டையை 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டது. அதன் பின்னர், எதிர்மேல்முறையீட்டாளர்கள் இருவரும் அமெரிக்கக் குடிமக்களாகிவிட்டதால், அவர்களுக்கு இடையேயான நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பிற்காக 05.11.2017 அன்று இரண்டாவது விண்ணப்பமானது சமர்ப்பிக்கப்பட்டது. 06.12.2016-க்குள் இருவரும் அமெரிக்கக் குடிமக்களாகிவிட்டதால், அவர்கள் இந்தியாவில் வாழும் இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோராக தத்தெடுக்கத் தகுதியற்றவர்கள். முதல் பதிவில் எந்த ஒரு கூடுதல் தகவலையும் பதிவேற்ற சட்டம் அல்லது ஒழுங்குமுறைகள் எந்த வழிமுறையையும் வழங்கவில்லை என்பது ஒரு இந்தியரால் வெளிநாட்டு குடியுரிமையைப் பெறுவதன் சட்ட நிலை மற்றும் விளைவுகளை மாற்ற முடியாது. 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அமெரிக்க

குடியுரிமையைப் பெறுவதால் ஏற்படும் விளைவுகள் உடனடியாக அமலுக்கு வரும்.

13. ஒழுங்குமுறை விதி 41 ஆனது, பொதுவான மூப்பு பட்டியலைக் கையாள்கிறது என்று எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்கறிஞரின் சமர்ப்பிப்பை கவனிக்கப்பட வேண்டும். 2017 -ஆம் ஆண்டு ஒழுங்குமுறையின் 41 வது விதி பின்வருமாறு:-

> **41. வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரின் மூப்புநிலை.-** (1) தத்தெடுக்கும் பெற்றோர்களுக்கு ஒரே மூப்புப்பட்டியலின் அடிப்படையில் குழந்தைகளை பரிந்துரைக்க வேண்டும், இது இந்த விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுசெய்த நாளிலிருந்து மற்றும் பிற அளவுகோல்களின்படி பராமரிக்கப்படும்.
>
> (2) குடியுரிமை பெற்ற இந்தியர்களின் மூப்புநிலை, குழந்தை தத்தெடுப்பு ஆதார தகவல் மற்றும் வழிகாட்டல் அமைப்பில், கள ஆய்வு அறிக்கை தவிர, இணைய பதிவு மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பித்த தேதியின் அடிப்படையில் அமையும்.
>
> (3) வெளிநாடு வாழ் இந்தியர் அல்லது வெளிநாட்டு குடியுரிமை பெற்ற இந்தியர் அல்லது வெளிநாட்டு தத்தெடுப்பு வருங்கால ளபெற்றோர்களின் மூப்புநிலை என்பது, குழந்தை தத்தெடுப்பு ஆதார தகவல் மற்றும் வழிகாட்டல் அமைப்பில் கள ஆய்வு அறிக்கையுடன்

தேவையான ஆவணங்களை இணைய பதிவு மற்றும் சமர்ப்பித்த தேதியின் அடிப்படையில் அமையும்.

(4) வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்கள் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் ஒருமுறை மாநில விருப்பத்தை மாற்ற அனுமதிக்கப்படுவார்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குப் பிறகு அவர்கள் மாநில விருப்பத்தை மாற்றினால், அவர்கள் மாற்றப்பட்ட மாநிலத்தில் பட்டியல் மூப்புக்கு கீழே வைக்கப்படுவார்கள்.

(5) தனிநபராக பதிவுசெய்யப்பட்ட, ஆனால் பின்னர் திருமணம் செய்துகொள்ளும் வருங்கால தத்தெடுப்பு பெற்றோரின் மூப்புநிலை, புதிய கள ஆய்வு அறிக்கையைப் பெற்ற பிறகு, பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து தனிநபராகக் கணக்கிடப்படும்.

(6) சாதாரணக் குழந்தைக்காகப் பதிவுசெய்யப்பட்ட வருங்கால தத்தெடுப்பு பெற்றோர்கள், சிறப்புத் தேவையுள்ள குழந்தையைத் தத்தெடுக்க முடியும் அல்லது அதே பதிவில் வைக்கக் கடினமான குழந்தையைத் தத்தெடுக்க முடியும்.

14. 2017 -ஆம் ஆண்டு விதிமுறைக்கு முன், இரண்டு தனித்தனி மூப்பு பட்டியல்கள் இருந்தன, அவை வழிகாட்டுதல்கள், 2015 இன் கீழ் பராமரிக்கப்பட்டன, அவை இப்போது ஒரே மூப்பு பட்டியலாக மாற்றப்பட்டுள்ளன. இப்போது ஒழுங்குமுறை விதி 41 ஆல் கவனிக்கப்படும் ஒற்றை மூப்பு பட்டியல்

இருந்தாலும், குடியுரிமை பெற்ற இந்தியர் மற்றும் குடியுரிமை அல்லாத இந்தியர் அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியக் குடிமகன் ஆகியோர் தொடர்பான அந்த மூப்புப்பட்டியலில் இடம் பெறுவது, விதிமுறைகள் 41(2) & 41(3) இல் வழங்கப்பட்டுள்ள பல்வேறு அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டது. பொதுவான மூப்பு பட்டியலை, அந்தந்த பிரிவுகளின்படி உள்நாட்டு தத்தெடுப்பு மற்றும் நாடுகளுக்கிடையே தத்தெடுப்பு ஆகியவற்றின் நோக்கத்திற்காக, அந்த வகைகளின்படி பயன்படுத்த வேண்டும் என்றாலும், பொதுவான மூப்புநிலை பட்டியல் பராமரிக்கப்படுகிறது என்ற ஒரே காரணத்திற்காக, உள்நாட்டுத் தத்தெடுப்பிற்கும், நாடுகளுக்கிடையேயான தத்தெடுப்பு ஆகியவற்றுக்கு இடையேயான வித்தியாசத்தை இழக்கவோ அல்லது வெளியேற்றவோ முடியாது. ஒரு குடியுரிமை பெற்ற இந்தியர் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்ற பிறகு, ஒரு புதிய பதிவைச் சமர்ப்பித்தால், அதன் முதல் பதிவின் விளைவு மற்றும் மதிப்பு என்ன என்பதை ஒழுங்குமுறை 41 அல்லது வேறு எந்த ஒழுங்குமுறையும் சிந்திக்கவில்லை என்பது உண்மைதான். விதிமுறைகள் மௌனமாக இருந்தாலும், அத்தகைய உண்மைச் சூழ்நிலைக்கு எந்தவொரு வழிமுறையையும் அல்லது எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்றாலும், வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெறுவதன் இயல்பான விளைவுகள் பின்பற்றப்படும். எனவே, 06.12.2016 அன்று 1 -ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்ற பிறகு, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் குடியுரிமை பெற்ற இந்தியராகத்

தத்தெடுப்பதற்கான உரிமை இழக்கப்படுகிறது என்று கற்றறிந்த கூடுதல் தலைமை வழக்கறிஞரின் சமர்ப்பிப்பில் வலுவாகக் காண்கிறோம். 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்க்கு குழந்தை வழங்குவது, அவர்களின் முதல் விண்ணப்பத்தின் 19.07.2016 தேதியின் அடிப்படையில் அமைந்தது, இதில் வெளிநாட்டு குடியுரிமையின் பிரிவு புறக்கணிக்கப்பட்டால், அது சட்டம் மற்றும் விதிகளின்படி இருந்தது. மேலும், 06.12.2016 அன்று 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றதன் உண்மை, தத்தெடுப்பு நோக்கங்களுக்காக புறக்கணிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பது இந்த மேல்முறையீடுகளில் கவனிக்கப்பட்டு பதிலளிக்கப்பட வேண்டிய கேள்வியாகும்.

15. பிரிவுகள் 58 மற்றும் 59 தத்தெடுப்புக்கான இரண்டு வெவ்வேறு வழிமுறைகளை வழங்குகிறது. பிரிவு 59(1) இன் படி, ஆதரவற்ற அல்லது கைவிடப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட குழந்தையை, சட்டப்படி தத்தெடுப்புக்குத் தயாரான தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் சிறப்பு தத்தெடுப்பு முகமை மற்றும் மாநில முகமை ஆகியவற்றின் கூட்டு முயற்சி இருந்தபோதிலும், இந்திய அல்லது வெளிநாடு வாழ் இந்திய வருங்கால தத்தெடுப்பு பெற்றோருடன் சேர்க்க முடியவில்லை என்றால், அந்த குழந்தை தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்புக்கு உகந்தது. எனவே, குழந்தை தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்கள் கடந்திருக்க வேண்டும். இந்த

வழக்கில், 14.12.2017 அன்று பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள குழந்தைகள் நலக் குழுவால் குழந்தை தத்தெடுக்க உகந்தது என அறிவிக்கப்பட்டது. அறுபது நாட்கள் காலாவதியாகும் முன், பிரிவு 59 இன் கீழ் தத்தெடுக்கத் தகுதியுடைய பெற்றோருக்கு குழந்தையை தத்தெடுப்பதற்கு வழங்கியிருக்க முடியாது. எவ்வாறாயினும், 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தத்தெடுப்புக்கான விண்ணப்பங்களைத் தொடர்ந்தனர், ஆரம்பத்தில் குடியுரிமை பெற்ற இந்தியர்களாகவும் அதன்பிறகு இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமக்களாகவும் இருந்ததை நாங்கள் மறந்துவிடவில்லை. பிரிவு 57 இன் படி, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆகிய இருவரும் குழந்தையை தத்தெடுக்க முழு தகுதியும் திறமையும் கொண்டவர்கள். மேலே குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில், குழந்தை ஷோமியா 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது, அவர்கள் ஏற்றுக்கொண்டதை சரியாகத் தெரிவித்தனர், மேலும் குழந்தையுடன் தொடர்பு கொண்டு, குழந்தையை தத்தெடுப்பதற்கும், அனைத்து வகையிலும் கவனிக்கவும், நல்ல கல்வியை வழங்குவதற்கும் தயாராக உள்ளனர். குழந்தையை தத்தெடுப்பதற்கான முயற்சியில் அவர்களின் உறுதியான நம்பிக்கை அல்லது திறமையில் எங்களுக்கு எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் இன்றுவரை நடைமுறையில் உள்ள சட்டப்பூர்வ நடைமுறை மற்றும் சட்டப்பூர்வ ஆட்சி அனைத்து ஆர்வலர்களுக்கும் சமமாக பொருந்தும், அதாவது, இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோர்கள் மற்றும்

நாடுகளுக்கிடையே தத்தெடுக்கும் வருங்கால வளர்ப்பு பெற்றோர்களின் நோக்கினை கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. எவ்வாறாயினும், மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் உண்மைகளின் விளைவுகளால் இந்தியாவின் வெளிநாட்டுக் குடிமக்களாகத் தகுதியுடையவர்களாக இருப்பதோடு பிரிவு 59(2) ன் படி, 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இடையேயான தத்தெடுப்பில் முன்னுரிமை அளிக்கப்படலாம்.

16. மேற்கூறிய விவாதங்களின் பார்வையில், சி.அ.ம. (உ) எண்கள் 1476-1477/2019 இல் இருந்து எழும் உரிமையியல் மேல்முறையீடுகளை பின்வரும் முறையில் தீர்ப்பதில் நீதியின் முடிவு கிடைக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்:

(i) 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் 15.03.2018 தேதியிட்ட மின்னஞ்சல் மூலம் 27.02.2018 தேதியிட்ட முடிவு உறுதிப்படுத்தப்படுகிறது.

(ii) 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களின் 19.07.2016 தேதியிட்ட முதல் பதிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை பரிசீலித்து ஆய்வு செய்ய அறிவுறுத்திய கற்றறிந்த தனி நீதிபதி மற்றும் நீதியர் ஈராய அமர்வின் தீர்ப்புகள் நீக்கறவு செய்யப்படுகிறது.

(iii) தகுதிவாய்ந்த அதிகாரம் மீண்டும் குழந்தை ஷோமியாவை தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்க

வேண்டும். மேலும் இன்று முதல் ஒரு வாரத்திற்குள் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

(iv) குழந்தை (ஷோமியா) தத்தெடுப்பதற்கு சட்டப்பூர்வமாக உகந்தது என்று அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள், அக்குழந்தை இந்திய வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரால் எடுக்கப்படாமலோ அல்லது தத்தெடுக்கப்படாமலோ இருந்தால், குழந்தை ஷோமியாவை 1-ஆம் & 2-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு நாடுகளுக்கு இடையேயான தத்தெடுப்பில் தத்தெடுக்கப்படும். அதன் பிறகு அனைத்து நடவடிக்கைகளும் முடிக்கப்படும்.

17. இப்போது, சி.அ.மனு (உரிமையியல்) எண். 1478-1479 இல் எழும் உரிமையியல் மேல்முறையீடுகளுக்கு வரும்போது, 2018 இன் உ.நீ.வழக்கு எண்கள் 1690-1691 இல் இயற்றப்பட்ட 04.09.2018 தேதியிட்ட ஆணைக்கு எதிராக இந்த மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த அவமதிப்பு நடவடிக்கைகள் 04.09.2018 தேதியிட்ட எதிர்த்துரைக்கப்பட்ட தீர்ப்பின் மூலம் நீதியர் ஈராயத்தின் அமர்வால் நீக்கறவு செய்யப்பட்டதால், அது தொடர்பாக எதுவும் கூறத் தேவையில்லை. எவ்வாறாயினும், இந்த வழக்கின் உண்மை சூழ்நிலையில், அவமதிப்பு விண்ணப்பங்களை தாக்கல் செய்வது தவறானது என்பதை நாங்கள் கவனிக்கிறோம். இரண்டு அவமதிப்பு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட வேண்டியவை. மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன

மற்றும் அவமதிப்பு விண்ணப்பங்கள் இதன்படி நிராகரிக்கப்படுகின்றன. தரப்பினர்கள் தங்கள் சொந்த செலவை ஏற்க வேண்டும்.

இந்த விவகாரங்கள் தீர்க்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."